# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 115/மா/2026
நாள்17.07.2026

P. நாகராஜ் மற்றும்
B. விஜயகுமார், சென்னை --- முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர், மண்டலம் 4
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

சென்னை–600 013, இராயபுரம், தொப்பை தெரு, கதவு எண்.29 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P.நாகராஜ் மற்றும் சென்னை–600 081, தண்டையார்பேட்டை, துர்கா தேவி நகர், சால்ட் குறுக்கு தெரு, கதவு எண் 15 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் ஆகியோரின் 30.03.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.04.2026 அன்று பெறப்பட்டு 115/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 013, இராயபுரம், தொப்பை தெரு, கதவு எண்.29 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P.நாகராஜ் மற்றும் சென்னை–600 081, தண்டையார்பேட்டை, துர்கா தேவி நகர், சால்ட் குறுக்கு தெரு, கதவு எண் 15 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B.விஜயகுமார் ஆகியோர் 30.03.2026 நாளிட்ட தங்களது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளனர்:–

"1. மண்டலம் 4, வார்டு 48ற்கு உட்பட்ட வெங்கடகிருஷ்ணன் தெருவில் அமைந்துள்ள பெரிய மார்கெட் தெருவில் நான் கடந்த 15 ஆண்டுகளாக மாலை கடை நடத்தி வருகிறேன். என் கடை 16/17, வெங்கடகிருஷ்ணன் தெரு, மார்கெட் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 600 021 என்ற முகவரியில் வியாபாரம் செய்து வருகிறேன். என்னுடைய கடை வியாபாரம் என் வாழ்வாதாரத்தின் ஒரு அங்கமாகவே கருதியிருந்தேன்.

2. இத்தகைய சூழ்நிலையில் திடீரென்று பெருநகர மாநகராட்சி அதிகாரிகள் ஒரு நாள் அங்குள்ள கடைகள் சிதலமடைந்ததாக கூறி குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள்ளாக எவ்வித நிவாரண உதவியும் வழங்காமல் கடைகளை அங்கிருந்து அப்புறப்படுத்தினார்கள். மாநகராட்சி அதிகாரிகள் உறுதி அளித்தது என்னவென்றால் விரைந்து நீங்கள் கடையை காலி செய்தீர்கள் என்றால் உங்களுக்கு விரைந்து கடையை புதிதாக கட்டி உங்களிடம் ஒப்படைப்போம் என்று வாக்குறுதி அளித்தார்கள். எனவே மாநகராட்சி அதிகாரிகள் கூறிய வாக்குறுதியை நம்பி 2020ம் ஆண்டு கடையை காலிசுவாதீனம் செய்து பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரியிடம்

ஒப்படைத்தோம். ஆனால் ஐந்து ஆண்டுகளாகியும் இன்று வரையில் கடையை கட்டி தராமல் தாமதம் செய்து வருகிறார்கள்.

3. இத்தகைய சூழ்நிலையில் தீர்மான எண் 1121/2025, பொருள் எண் 41 சென்னை மாநகராட்சி கட்டடத்துறையால் மண்டலம்–04, வார்டு–48, வெங்கடகிருஷ்ணன் தெருவில் உள்ள இடத்தில் வணிகவளாகமாக (அதாவது தரைதளம் மற்றும் முதல் தளம்) புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெறவுள்ளதாகவும், மண்டலம்–4 அதிகாரிகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கு புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் விரைந்து பணி முடிக்கப்படும் என்ற தகவலும் எனக்கு கிடைக்கபெற்றது. எனவே, ஐயா அவர்கள் மேலும் இந்த மனு மீது தனிகவனம் செலுத்தி ஐந்தாண்டுகளாக வியாபாரம் இழந்து வருமானம் இழந்துள்ள எனக்கு விரைந்து எவ்வித சட்டசிக்கல்கள் இல்லாத வண்ணம் கட்டிடம் பணி முடிக்கப்பட்டு எனக்கு கடை ஒதுக்கீடு செய்து தருமாறு மண்டலம்–04 அலுவலர் அவர்களிடம் 18.12.2025 அன்று மனு அளித்திருந்தேன்.

4. ஆனால் இதுநாள் வரை அந்த மனு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் மண்டலம் 4 அதிகாரிகள் காலம் தாழ்த்தி வருகிறார்கள். நான் மனு அளித்து 100 நாட்கள் மேல் ஆகியும் எவ்வித பதிலும் அளிக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள்.

எனவே, தமிழ்நாடு உள்ளாட்சி நடுவன் அமைப்பு இந்த மனுவினை ஏற்று சம்பந்தப்பட்ட அதிகாரியை உரிய விசாரணை மேற்கொண்டு எனக்கு உத்திரவு பிறப்பித்து வழங்கும்படி தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

2. மனுதாரர்கள் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 30.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 19.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் செயற்பொறியாளர் தனது 19.06.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

மண்டலம்–4, வார்டு 48ற்கு உட்பட்ட வெங்கட கிருஷ்ணன் தெருவில் அமைந்துள்ள பெரிய மார்கெட் தெருவில் திரு. பெ. நாகராஜ் மற்றும் திரு. B. விஜயகுமார் ஆகியோர் கடந்த 15 ஆண்டுகளாக மாலை கடை எண் 16/17, வெங்கட கிருஷ்ணன் தெரு, மார்கெட் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–600021 என்ற முகவரியில் வியாபாரம் செய்து வந்ததாகவும் தற்போது அந்த இடத்தில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள வணிகவளாகத்தை இடித்து விட்டு அந்த இடத்தில் புதிதாக வணிக வளாகம் கட்டி வருவதால் அந்த இடத்தில் அவர்களுக்கு தங்களின் வாழ்வாதாரத்திற்காக கடை ஒதுக்கீடு செய்து தருமாறு மனு அளித்துள்ளார்கள்.

இதுகுறித்து தெரிவித்து கொள்வது யாதெனில், மண்டலம்–4, வார்டு–48. வெங்கடகிருஷ்ணன் தெருவில் ஏற்கனவே இருந்த வணிக வளாகம் மிகவும் பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில் இருந்ததால் பொது மக்களின் பாதுகாப்பினை கருதி அந்த கட்டிடத்தினை இடித்துவிட்டு புதிதாக வணிக வளாகம் கட்ட மன்றத்தின் தீர்மான எண் 1121/2025 நாள் 22.09.2025–ல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடிவுற்றபின் கடை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

5. மனுதாரர்கள் 19.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"(1) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4, வார்டு 48ற்கு உட்பட்ட கடை 16/17, வெங்கடகிருஷ்ணன் தெரு, மார்கெட் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 600 021 என்ற முகவரியில் கடந்த 15 ஆண்டுகளாக வியாபாரம் செய்து வருகிறேன். என்னுடைய கடை வியாபாரம் என் வாழ்வாதாரத்தின் ஒரு அங்கமாகவே கருதியிருந்தேன்.

(2) இத்தகைய சூழ்நிலையில் திடீரென்று பெருநகர மாநகராட்சி அதிகாரிகள் ஒரு நாள் அங்குள்ள கடைகள் சிதலமடைந்ததாக கூறி குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள்ளாக எவ்வித நிவாரண உதவியும் வழங்காமல் கடைகளை அங்கிருந்து அப்புறப்படுத்தினார்கள். மாநகராட்சி அதிகாரிகள் நீங்கள் கடையை காலி செய்தீர்கள் என்றால் உங்களுக்கு விரைந்து கடையை புதிதாக கட்டி உங்களிடம் ஒப்படைப்போம் என்று வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் ஐந்து ஆண்டுகளாகியும் இன்று வரையில் வாக்கு உறுதியின்படி கடையை கட்டி தராமல் தாமதம் செய்து வருகிறார்கள்.

(3) இத்தகைய சூழ்நிலையில் தீர்மான எண் 1121/2025, பொருள் எண் 41 சென்னை மாநகராட்சி கட்டடத்துறையால் மண்டலம்–4,வார்டு–48,வெங்கடகிருஷ்ணன் தெருவில் உள்ள இடத்தில் வணிகவளாகமாக (அதாவது தரைதளம் மற்றும் முதல் தளம்) புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெறவுள்ளதாகவும், மண்டலம்–4 அதிகாரிகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கு புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் விரைந்து பணி முடிக்கப்படும் என்ற தகவலும் எனக்கு கிடைக்கபெற்றது.

இன்றைய விசாரணையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் சார்பாக ஆஜரான இளநிலை பொறியாளர் கட்டிடப்பணி முடிவடைந்ததுடன் மனுதாரருக்கு கடை ஒதுக்கீடு செய்யப்படும் என்ற தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் எனக்கு கடை ஒதுக்கீடு செய்ய உத்திரவு பிறப்பிக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்."

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலைப் பொறியாளர் 19.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.48ற்கு உட்பட்ட சென்னை–21, பழைய வண்ணாரப்பேட்டை, மார்கெட் தெரு, வெங்கடகிருஷ்ணன் தெருவில் அமைந்துள்ள வணிகவளாக கட்டிடம் சிதலம் அடைந்ததால் அதனை அகற்றி விட்டு புதிதாக வணிக வளாகம் கட்ட மாமன்ற தீர்மானம் எண்.1121/2025 பொருள் எண்.41–ன்படி அனுமதி அளிக்கப்பட்டது.

மேற்கண்ட வணிக வளாகம் கட்டும் பணி இன்னும் முழுமை பெறவில்லை. இந்நிலையில் பழைய வணிக வளாக கட்டிடத்தின் நடைபாதையில் திருவாளர்கள் P.நாகராஜ் மற்றும் B.விஜயகுமார் ஆகியோர் அனுமதியில்லாமல் கடை நடத்தி வந்தார்கள். இக்கட்டிடம் இடிக்கப்பட்டு அக்கட்டித்தின் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் 54 கடைகள் கட்டப்பட்டு வரும் நிலையில் ஏற்கனவே பழைய வணிக வளாகத்தில் கடை வைத்திருந்த 16 நபர்களுக்கு ஒதுக்கீடு செய்த பிறகு மீதமுள்ள 38 கடைகளில் மனுதாரர் கோரியவாறு

கடை ஒதுக்கீடு செய்யப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. மனுதாரர்களின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4, வார்டு 48ற்கு உட்பட்ட கடை 16/17, வெங்கடகிருஷ்ணன் தெரு, மார்கெட் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 600 021 என்ற முகவரியில் கடந்த 15 ஆண்டுகளாக வியாபாரம் செய்து வந்தார்கள் என்பதும், இத்தகைய சூழ்நிலையில் பெருநகர மாநகராட்சி அதிகாரிகள் அங்குள்ள கடைகள் சிதலமடைந்ததாக கூறி குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள்ளாக எவ்வித நிவாரண உதவியும் வழங்காமல் கடைகளை அங்கிருந்து அப்புறப்படுத்தி விட்டு, மாநகராட்சி அதிகாரிகள் மனுதாரர் கடையை காலி செய்தால், தங்களுக்கு விரைந்து கடையை புதிதாக கட்டி தங்களிடம் ஒப்படைப்போம் என்று வாக்குறுதி அளித்து ஐந்து ஆண்டுகளாகியும் கடையை கட்டி தராமல் தாமதம் செய்து வருகிறார்கள் என்பதும், மேற்கண்ட இடத்தில் தரைதளம் மற்றும் முதல் தளம் கொண்ட வணிகவளாகமாக புதிய கட்டடம் கட்டும் பணிக்கு புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, விரைந்து பணி முடிக்கப்படும் என்பதும், கட்டிடப்பணி முடிவடைந்ததுடன் மனுதாரருக்கு கடை ஒதுக்கீடு செய்யப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் இளநிலை பொறியாளர் தெரிவித்ததின் அடிப்படையில் தங்களுக்கு கடை ஒதுக்கீடு செய்ய உத்திரவு பிறப்பிக்குமாறு கோரியிருப்பது மனுதாரர்களின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தனது மனுவில் தெரிவித்த, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.48ற்கு உட்பட்ட சென்னை–21, பழைய வண்ணாரப்பேட்டை, மார்கெட் தெரு, வெங்கடகிருஷ்ணன் தெருவில் அமைந்துள்ள வணிகவளாக கட்டிடம் சிதலம் அடைந்ததால் அதனை அகற்றி விட்டு புதிதாக வணிக வளாகம் கட்ட மாமன்ற தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட வணிக வளாகம் கட்டும் பணி முழுமை பெறவில்லை என்பதும், மேலும் பழைய வணிக வளாக கட்டிடத்தின் நடைபாதையில் திருவாளர்கள் P.நாகராஜ் மற்றும் B.விஜயகுமார் ஆகியோர் அனுமதியில்லாமல் கடை நடத்தி வந்தார்கள் என்பதும், இக்கட்டிடம் இடிக்கப்பட்டு அக்கட்டித்தின் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் 54 கடைகள் கட்டப்பட்டு வரும் நிலையில், ஏற்கனவே பழைய வணிக வளாகத்தில் கடை வைத்திருந்த 16 நபர்களுக்கு கடை ஒதுக்கீடு செய்த பிறகு, மீதமுள்ள 38 கடைகளில் மனுதாரர் கோரியவாறு கடை ஒதுக்கீடு செய்யப்படும் என்பதும் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மணடலம்–4ன் செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் விசாரணைக்கு ஆஜரான இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.48ற்கு உட்பட்ட சென்னை–21, பழைய வண்ணாரப்பேட்டை, மார்கெட் தெரு, வெங்கடகிருஷ்ணன் தெருவில் அமைந்துள்ள வணிகவளாக கட்டிடம் சிதலம் அடைந்ததால், இக்கட்டிடம் இடிக்கப்பட்டு புதிய கட்டிடம் தரைதளம் மற்றும் முதல் தளம் என 54 கடைகள் கட்டப்பட்டு வரும் நிலையில், ஏற்கனவே பழைய வணிக வளாகத்தில் கடை வைத்திருந்த 16 நபர்களுக்கு கடை ஒதுக்கீடு செய்த பிறகு, மீதமுள்ள 38 கடைகளில், மனுதாரர்கள் கோரியவாறு கடை ஒதுக்கீடு செய்யப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் இளநிலை பொறியாளர் தன்னுடைய

வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள்17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. P.நாகராஜ்,
எண்.29, தொப்பை தெரு,
இராயபுரம், சென்னை–600 013.

(2) B.விஜயகுமார்,
எண்.14/15 சால்ட் குறுக்கு தெரு,
துர்காதேவி நகர், தண்டையார் பேட்டை,
சென்னை–600 081.

(3) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(4) மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 600 021.

(5) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.